# பத்திரிக்கைச் செய்தி

## மின் இணைப்பு வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற மின்வாரிய ஊழியர்கள் 3 பேருக்கு சிறைதண்டனை

ஈரோடு, சூரம்பட்டியை சேர்ந்த ராமாயாள் க/பெ சுப்பிரமணியம் என்பவருக்கு சொந்தமான கோபிசெட்டிபாளையம், நஞ்சை கோபி கிராமத்தில் உள்ள நிலத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள லஞ்சம் கேட்டு அலைகழித்த, திரு.N.கேசவன், இளநிலை பொறியாளர் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து, திரு.N.கேசவன், இளநிலை பொறியாளர் சொன்னதின் பேரில், லஞ்சப்பணம் ரூ.2,000/- பெற்றுக்கொண்ட திரு.D.விஸ்வராஜ், உதவி செயற்பொறியாளர் மற்றும் ரூ.3,000/- பெற்றுக் கொண்ட திரு.R.பழனிசாமி, போர்மேன் மற்றும் திரு.N.கேசவன், இளநிலை பொறியாளர் ஆகிய 3 பேரையும் கடந்த 04.02.2008ம் தேதி ஈரோடு லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது செய்யப்பட்ட வழக்கில் இன்று 16.02.2024ம் தேதி ஈரோடு தலைமை குற்றவியல் மற்றும் தனி நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கில் மேற்படி 3 நபர்களும் குற்றவாளிகள் என்று முடிவுசெய்து, அவர்களுக்கு ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 7-ன்கீழ் தலா மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தன்டனையும் அபராதமாக தலா ரூ.5,000/-மும், அபராதம் கட்ட தவறினால் இரண்டு மாதங்கள் சிறை தண்டனையும், ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 13(1)(d)-ன் கீழ் தலா மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தன்டனையும், அபராதமாக தலா ரூ.5,000/-மும் அபராதம் கட்ட தவறினால் இரண்டு மாதங்கள் சிறை தண்டனையும், மேலும், லஞ்ச பணத்தை மறைக்கும் நோக்கத்தில் வாயில் போட்டு விழுங்க முயற்சி செய்த திரு.D.விஸ்வராஜ், உதவி செயற்பொறியாளருக்கு 8 மாதங்கள் சிறைதண்டனையும் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.